# மெட்ரோ ரயில் நேரம் இன்று முதல் நீட்டிப்பு

**சென்னை, ஆக. 23–**

மெட்ரோ ரயில் இயக்க நேரம் இன்று முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையம் – விம்கோ நகர், பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் நிலையம் இடையே தினமும் அதிகாலை 5:30 மணியில் இருந்து இரவு 10:00 மணி வரை மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது.

ரயில்களில் பயணியர் வருகை அதிகரித்துள்ளதால், இன்று முதல் ரயில்களின் நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. திங்கள் முதல் சனிக்கிழமை வரை அதிகாலை 5:30 மணியில் இருந்து இரவு 11:00 மணி வரை ரயில்கள் இயக்கப்படும்.

காலை 8:00 – 11:00 மணி வரை, மாலை 5:00 – இரவு 8:00 மணி வரை ஐந்து நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும். மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும், அரசு பொது விடுமுறை நாட்களிலும் காலை 7:00 – இரவு 10:00 மணி வரை 10 நிமிட இடைவெளியில் ரயில் இயக்கப்படும்.

மெட்ரோ நிலைய வளாகத்தில், ரயிலில் முக கவசம் அணியாவிட்டால் 200 ரூபாய் அபராதம் செலுத்த நேரிடும்.

இவ்வாண்டு ஜூன் 21 முதல் நேற்று முன்தினம் வரை, முக கவசம் அணியாத 176 பயணியரிடம் 35 ஆயிரத்து 200 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.